

முன்னாள் அமைச்சர் பெரியவர் மன்னை நாராயணசாமி அவர்களின் கொள்ளு பேரனும், மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும் மன்னை நகர மன்றத் தலைவருமான மன்னை த.சோழராஜனின் மகனுமாகிய சோழ. அருண் மொழிவர்மன் university college of London (UCL) ல் சட்டம் (LLM )மேற்படிப்பு படிப்பதற்காக லண்டன் (London) செல்லும் முன் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில்

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, செப்.17-

சென்னையில் இன்று (செப்.17ம் தேதி செவ்வாய்க் கிழமை) நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமென மாவட்ட செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

செப்டம்பர் 16 கழகம் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆம் ஆண்டு பவள விழாவை முன்னிட்டு தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகளின் அனைவரின் வீடுகள், நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடிகளை பறக்க விட வேண்டும்,கழக கொடி கம்பத்தை புதுப்பித்து கழகக் கொடியை ஏற்ற வேண்டும்,ஏழை எளிய பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும், பேரறிஞர் அண்ணா,பெரியார் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு அவர்களின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்ய வேண்டும்,

அதேபோல் சென்னையில் வருகிற 17 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் கழக முப்பெரும் விழா இந்தியாவே திரும்பி பார்க்கின்ற வகையில் ஒரு மாபெரும் வெற்றி விழா நடைபெற உள்ளது, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பின்னால் தான் இருக்கிறோம் என்பதை இந்தியாவுக்கே பறைசாற்றும் வகையில் கழகத் தொண்டர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கையின் மூலம் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக் கல்லூரி மைதானத்தில் 30 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்து, பல்வேறு காய்கறிகளால் வடிவமைக்கப்பட்ட கழுகு மாதிரியை பார்வையிட்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர் டி. ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கழக முப்பெரும் விழாவில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப்.16-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தலைமை கழகத்தின் சார்பில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் இன்று (17.9.2024 செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணியளவில் அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள். இந்த முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு.



பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட,, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### சேலம் மத்திய மாவட்டக் கழக

# சார்பு அணிகளுக்கு ஒன்றிய - பகுதி அளவில் நிர்வாகிகள் நியமனம்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சேலம், செப். 17 -

தலைமைக் கழக அறிவிப்பின்படி, சேலம் மத்திய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக சார்பு அணிகளுக்கு ஒன்றிய கழக, பகுதி கழக அளவில் ஒரு அமைப்பாளர் 5 துணை அமைப்பாளர்கள், பேரூர் கழகத்திற்கு ஒரு அமைப்பாளர் 3 துணை அமைப்பாளர்கள் வீதம் நியமிக்கப்படவுள்ளார்கள். எனவே விருப்பம் உள்ள கழகத் தோழர்கள் மாவட்ட தி.மு.க. அலுவலகமான “கலைஞர் மாளிகை”யில் நாளை (18.09.2024 புதன்கிழமை) காலை 9.00 மணி



முதல் அதற்கான விண்ணப்ப படிவத்தை நேரடியாக பெற்று பூர்த்தி செய்து வாக்காளர் அடையாள அட்டை (Xerox) நகல் விண்ணப்பத்துடன் இணைத்து உடனடியாக அன்றைய தினமே மாவட்டக் கழக அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, வர்த்தகர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, நெசவாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, ஆதி திராவிடர் நலக் குழு, அயலக அணி, சிறுபான்மையினர் நல பிரிவு, தொழிலாளர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் மத்திய மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகளால் 19.09.2024 வியாழக்கிழமை காலை 09.00 மணி முதல் நடத்தப்படும் எனவும் ஒன்றிய கழக, பகுதி கழக மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் நேர்காணல் சிறப்பாக நடைபெற ஆவன செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




